இயற்கை மற்றும் பட்டாம்பூச்சி அமைப்பு
TNBS

தமிழகப் பட்டாம்பூச்சிகள்

எங்கும் சுற்றிப்பறந்து திரியும் பட்டாம்பூச்சிகள் இயற்கையின் ஓர் அற்புத கொடையாகும். இவற்றிற்கான சரியான வாழ்விடம் கொண்ட தமிழகத்தில் 326 பட்டாம்பூச்சி இனங்கள் இருக்கின்றன. இயற்கைச் சூழலில் இவற்றின் பங்கையும் முக்கியத்துவத்தையும் அறிந்து இவற்றைப் பாதுகாப்பது நமது கடமையாகும். **எங்கும் தடையின்றிப் பறக்கட்டும் இவை!**

பட்டாம்பூச்சி – ஓர் அறிமுகம்

இயற்கையின் தூரிகைகளால் பல வண்ணங்களைக் கொண்டு படைக்கப்பட்ட ஓர் அற்புத உயிரினம் பட்டாம்பூச்சி. சூரிய ஒளி பூமியில் படும்போது உயிர்ப்பிக்கும் இவை, தம் மெல்லிய சிறகடித்துப் பறப்பதும் மலர்களில் இருந்து தேன் உறிஞ்சுவதும் பார்ப்பவரைப் பரவசப்படுத்தும்.

பட்டாம்பூச்சிகள், பூச்சி (Insects) இனத்தைச் சார்ந்தவையாகும். உயிரின வகைப்பாடுகளில் லெபிடோப்டெரா (Lepidoptera) எனும் வரிசையின் (order) கீழ் இவைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. உலகெங்கும் பரவியுள்ள இவற்றை அறியாதவர்களே இருக்க முடியாது. இந்த வரிசையில் இடம்பெறும் மற்றொரு முக்கிய பூச்சி இனமானது அந்திப்பூச்சி (அ) அந்துப்பூச்சி (Moths).

பட்டாம்பூச்சிகள் ஏறக்குறைய 12 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் தோன்றியவை. இன்று நாம் காணும் பெரும்பாலான பட்டாம்பூச்சி இனங்கள் 2.3-6.6 கோடி ஆண்டுகளுக்கு முன்பான இடைப்பட்ட காலத்தில் தோன்றியவை. பட்டாம்பூச்சிகளின் தோற்றம், உலகில் பூத்தாவரங்கள் தோன்றிய ஆரம்ப காலத்துடன் ஒத்துப்போகின்றன. இந்த இருவகை உயிரினங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கின்றன (பட்டாம்பூச்சிகளுக்கு தேன், தாவரங்களுக்கு மகரந்த சேர்க்கை).

அண்டார்டிகாவைத் தவிர உலகில் உள்ள அனைத்துக் கண்டங்களிலும் பட்டாம்பூச்சிகள் வாழ்கின்றன. பூமியின் வட துருவத்திற்கு அருகில் காணப்படும் ஒரு பட்டாம்பூச்சியானது ஆர்க்டிக் அப்பல்லோ (Arctic Apollo). உலகில் 17700க்கும் மேற்பட்ட பட்டாம்பூச்சி இனங்கள் உள்ளன. தென் அமெரிக்கக் கண்டத்தில் உலகில் அதிக அளவாக 7800 இனங்கள் உள்ளன. இந்திய நாட்டில் 1300க்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வடகிழக்கு மாநிலங்களில் காணக்கிடைக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் 330க்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. பட்டாம்பூச்சிகள் 7 குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் 6 குடும்பங்களைச் சேர்ந்த பூச்சிகள் காணப்படுகின்றன. இவையாவன: 1. தாவிகள், துள்ளிகள் (Skippers, Hesperiidae) 2. அழகிகள் (Swallowtails, Papilionidae) 3. வெள்ளையன்கள், புல்வெளியான்கள், நுனிச் சிறகன்கள் (Whites & Yellows, Pieridae) 4. வரியன்கள், சிறகன்கள், வசீகரன்கள் (Brush-footed Butterflies, Nymphalidae) 5. நீலன்கள் (Blues, Lycaenidae) 6. உலோக மின்னிகள் (Metalmarks, Riodinidae).



முழு வளர்ச்சி அடைந்த பட்டாம்பூச்சியின் தலைப்பகுதியில் உறிஞ்சு குழல், கூட்டுக்கண்கள், இரண்டு உணர்கொம்புகள் மற்றும் பரிசம் (Palpi) என்னும் உணர் உறுப்பு அமைந்திருக்கும். மூன்று பகுதிகளாக அமையப்பெற்ற மார்புப்பகுதியில் ஆறு கால்களும், ஒரு பக்கத்துக்கு இரண்டாக நான்கு இறக்கைகளும் அமைந்திருக்கும். சிலவகைப் பட்டாம்பூச்சி இனங்களின் கீழ் இறக்கைகளில் வால் போன்ற பகுதி அமைந்திருக்கும். பட்டாம்பூச்சிகளுக்கு நிறம் இறக்கைகளில் உள்ள செதில்களால் கிடைக்கிறது. நிறமி மற்றும் ஒளிச்சிதறல் முறைகளில் இறக்கைகள் நிறம் பெறுகின்றன. தோலால் ஆன கூட்டுக்குள் அமைந்த வயிற்றுப்பகுதியில் செரிமானம் மற்றும் இனப்பெருக்க உறுப்புகள் அமைந்துள்ளன.

பட்டாம்பூச்சிகளின் வாழ்க்கை சுழற்சி நான்கு வளர்ச்சி நிலைகளைக் கொண்டது. பெண் பட்டாம்பூச்சிகள் தமது உணவுத் தாவரங்களிலோ அல்லது அதன் அருகில் ஏதாவது ஓர் இடத்திலோ முட்டை இடுகின்றன. முட்டையிலிருந்து வெளி வரும் புழு, தனது முதல் உணவாக முட்டையின் ஓட்டை உண்ணும். அதன் பின்பு, இந்த நிலை முழுவதும் உணவு உண்பது மட்டுமே அதன் ஒரே வேலை. பெரும்பாலானவை தாவரங்களை உணவாகவும், மிகச்சில மற்ற பிற பூச்சிகளை உணவாகவும் ஆக்கிக்கொள்கின்றன. ஒவ்வொரு பட்டாம்பூச்சி இனமும் ஒரு குறிப்பிட்ட தாவரங்களை மட்டுமே உண்ணும். முழு வளர்ச்சி அடைந்த புழுக்கள் கூட்டுப்புழு என்னும் அடுத்த நிலைக்கு மாறுகின்றன. முழு வளர்ச்சி அடைந்த பட்டாம்பூச்சி கூட்டில் இருந்து வெளிப்படுகின்றது. வெளி வரும் பட்டாம்பூச்சியின் இறக்கைகள் ஈரமாய் இருக்கும். இறக்கைகள் விரைவிலேயே காய்ந்து பறப்பதற்குத் தயாராகிவிடும்.

பட்டாம்பூச்சிகளில் பல்லுருத்தோற்றம் காணப்படுகிறது. குறிப்பிடத்தக்க இனங்களில் ஆணும் பெண்ணும் வெவ்வேறு தோற்றங்கள் கொண்டும், சில இனங்களின் பெண் பட்டாம்பூச்சிகள் ஒன்றுக்கு மேற்பட்ட உருக்களிலும் காணப்படுகின்றன. எதிரிகளிடமிருந்து காத்துக்கொள்ள உருமறைப்பு, போலித்தன்மை காட்டல், எச்சரிக்கை தரும் நிறம் போன்ற உத்திகளைப் பயன்படுத்துகின்றன. நுண்ணுயிர்கள், ஈக்கள், எறும்புகள், குளவிகள் போன்ற உயிரினங்கள் சிலவகைப் பட்டாம்பூச்சி இனங்களுடன் ஒன்றுடன் ஒன்று சார்ந்தும் ஒட்டுண்ணியாகவும் வாழ்கின்றன. பட்டாம்பூச்சிகள் பறவை உள்ளிட்ட பிற உயிரினங்களுக்கு உணவாகின்றன. சிலவகைப் பட்டாம்பூச்சி இனங்களின் புழுக்கள் பயிர்களை தாக்குபவையாக இருப்பினும், பெரும்பாலானவை பூக்களின் மகரந்தச்சேர்க்கைக்கு உதவுவதால், நன்மை பயக்கும் ஓர் இனமாகவே அமைகின்றன.

பட்டாம்பூச்சிகளின் இடப்பெயர்ச்சி

இயற்கையின் ஓர் அற்புத நிகழ்வு பட்டாம்பூச்சிகளின் இடப்பெயர்ச்சி. பருவ காலங்களில் உணவுக்காகவும், கடின வாழ்வியல் சூழலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும் இவை இடம் பெயர்கின்றன. சிலவகைப் பட்டாம்பூச்சிகள் அதிக எண்ணிக்கையில் ஓரிடத்தில் இனப்பெருக்கமாகி வெளிப்படும் போதும் பிற இடங்களுக்கு இடம் பெயர்கின்றன. தமிழ்நாட்டில் வரியன்கள், சிறகன்கள், வசீகரன்கள் (Nymphalidae) குடும்பத்தைச் சேர்ந்த வரியன் மற்றும் கருப்பன் (Tigers and Crows) வகை பட்டாம்பூச்சிகள், இந்த இடப்பெயர்ச்சியில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. சிவப்பு உடல் அழகி, எலுமிச்சை அழகி, கொன்னை வெள்ளையன், மற்றும் பருபலா வெள்ளையன் போன்ற மேலும் சில பட்டாம்பூச்சி இனங்களும் இடப்பெயர்ச்சியை மேற்கொள்கின்றன.

ஈரப்பகுதிகளில் அமர்தல்

வெயில் காலங்களிலும், மழைக்காலங்களிலும், பட்டாம் பூச்சிகள் கூட்டம் கூட்டமாக ஈரம் நிறைந்த மண் பகுதிகளில் அமர்ந்து, உப்பு கலந்த நீரை உறிஞ்சுவதை நாம் காணலாம். இவைகள் பெரும்பாலும் ஆண் பூச்சிகளாகும். இவ்வாறு கிடைக்கும் உப்பானது பெண் பூச்சிகளுக்குக் கலவியின் போது ஆண் பூச்சியால் கொடுக்கப்படுகிறது. பட்டாம்பூச்சியின் முழுமையான இனப்பெருக்கத்திற்கு இவை மிக முக்கியமானதாகும். வெப்ப காலங்களில் வெப்பத்தைத் தணிப்பதற்கும் இச்செயல் (நீர் உறிஞ்சுதல்) உதவி புரிகிறது. ஈர மண்ணிலிருந்து மட்டும் அல்லாமல் அழுகும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் உடல்கள், பறவை மற்றும் விலங்குகளின் எச்சங்களில் இருந்தும் தமக்குத் தேவையான திரவத்தை எடுத்துக்கொள்கின்றன.

பட்டாம்பூச்சி - அதன் மதிப்புகள்

இயற்கையின் ஓர் அங்கமாகும் பட்டாம்பூச்சி. உணவுச்சங்கிலியில் இவை ஒரு முக்கிய இடம் பெறுகின்றன. பறவைகள், சிலந்தி, ஓணான், தவளை, ஏன் குரங்கிற்குக் கூட இவை உணவாக அமைகிறது.

இவ்வுலகில் தாவரங்கள் உயிர்ப்பித்து இருக்க இவை முக்கிய பங்காற்றுகின்றன. தேனீக்களும் பட்டாம்பூச்சிகளுமே மகரந்தச் சேர்க்கை நடைபெற முக்கிய காரணிகளாகும். பட்டாம்பூச்சியின் அழகில் மயங்காதோர் இல்லை. இவை அன்பின் வெளிப்பாடாகவும், சுதந்திரத்தின் குறியீடாகவும் உணரப்படுகின்றன. இலக்கியத்தில் ஒரு முக்கிய இடம் இவற்றிற்கு எப்பொழுதும் உண்டு.

இயற்கையைப் பற்றி, அதிலும் அறிவியலை எளிதில் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தர பட்டாம்பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சி போன்றவை மிகவும் உதவியாக இருக்கின்றன. பட்டாம்பூச்சிகளைப் பற்றி, பல அறிவியல் ஆராய்ச்சிகள் நம் மனித இனத்திற்கும் உலகிற்கும் பயன்படும் வண்ணம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

ஓர் இடத்தில் பட்டாம்பூச்சிகள் அதிகம் காணப்பட்டால், அங்கு இயற்கைச்சூழல் சரியாய் அமைந்துள்ளது என்று பொருள். இக் காரணத்தினாலே சுற்றுச் சூழலையும் சூழல் அமைப்பையும் மதிப்பிட பட்டாம்பூச்சி ஒரு மிகச் சிறந்த மதிப்பீட்டுக் குறியீடாக அமைகிறது.

இயற்கையின் ஓர் அங்கமான, நன்மைகள் பல புரியும், நம் அனைவரையும் கவரும் பல வண்ணம் கொண்ட பட்டாம்பூச்சிகள் என்றும் சிறகடித்துப் பறக்கட்டும், அதற்கு நாம் உறுதுணையாய் இருப்போம்!

தமிழ்நாடு - பட்டாம்பூச்சிகளின் நிலை

தென்னிந்தியாவில் உள்ள பட்டாம்பூச்சி இனங்களில் சற்றேறக்குறைய அனைத்தையும் பல்வேறுபட்ட வாழ்விடங்களைத் தம்மிடத்தே கொண்ட தமிழ்நாட்டில் காணலாம். தமிழ்நாட்டின் மேற்கு, தெற்கு மற்றும் வடமேற்குப் பகுதிகள் இயற்கை வளம் கொண்ட மலைகளால் அமையப்பெற்றுள்ளன. வளமையான கடற்பகுதிகள் கிழக்கிலும், மலைகள் மற்றும் சமவெளிகள் வடக்கிலும் அமைந்துள்ளன. மத்திய பகுதிகள் மற்றும் அதை ஒட்டிய தெற்குப் பகுதிகள் வறண்ட சமவெளிகளாகும்.

Tamil Yeoman

இதுவரை கிடைக்கப்பெற்ற தரவுகள் மற்றும் கடந்த 10 ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட நேரடிக் களப்பணிகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் 326 பட்டாம்பூச்சி இனங்கள் இருக்கலாம் என்ற உத்தேசப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. எமது, இயற்கை மற்றும் பட்டாம்பூச்சி அமைப்பு (TNBS), மேற்கொண்ட எண்ணிலடங்கா இயற்கை நடைகள், கள ஆய்வுகள், வனத்துறையுடன் இணைந்து நடத்தப்பட்ட முறைப்படுத்தப்பட்ட கணக்கெடுப்புகள் மூலம் இந்த 326 இனங்கள் பட்டியலில் இதுவரை 317 பட்டாம்பூச்சி இனங்கள் தமிழ்நாட்டில் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

பட்டாம்பூச்சி இனங்கள் மேற்குத்தொடர்ச்சி மலைகளில் அதிகம் காணப்பட்டாலும், கிழக்குத்தொடர்ச்சி மலைகள் மற்றும் சில உயர் சமவெளிப் பகுதிகளிலும் நல்ல எண்ணிக்கையில் காணக்கிடைக்கின்றன. எமது அமைப்பின் மூலம் பட்டாம்பூச்சிகள் அதிக எண்ணிக்கையில் இருக்கும் வாழிடங்களைக் கண்டறிந்து அவைகளை **பட்டாம்பூச்சி வளமைப்பகுதி**களாகத் தெரியப்படுத்தியுள்ளோம். பட்டாம்பூச்சிகளின் வாழ்விடங்களைப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

குடும்பம்	
அழகிகள்	19
புல்வெளியாள்கள், நுனிச்சிறகன்கள், வெள்ளையன்கள்	32
வரியன்கள், சிறகன்கள், வசீகரன்கள்	96
உலோக மின்னிகள்	2
நீலன்கள்	94
தாவிகள், துள்ளிகள்	83
மொத்தம்	326

தமிழும் பட்டாம்பூச்சியும்

ஜூன் மாதம் 2019ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசு "Tamil Yeoman" என்னும் பட்டாம்பூச்சியை மாநில பட்டாம்பூச்சிகளின் அடையாளமாக அறிவித்தது. 9 பட்டாம்பூச்சி இனங்கள் ஆங்கிலத்தில் தமிழ் என்னும் சொல்லுடன் தொடர்பு கொண்ட பொதுப்பெயரால் அழைக்கப்படுகின்றன. அவையாவன: Tamil Treebrown, Tamil Bushbrown, Tamil Catseye, Tamil Yeoman, Tamil Lacewing, Tamil Oakblue, Tamil Spotted Flat, Tamil Ace (Sitala Ace), Tamil Grass Dart, and Tamil Dartlet

தமிழ் மரச்சிறகன்
Tamil Treebrown

தமிழ் புதர்சிறகன்
Tamil Bushbrown

தமிழ் வெண்பட்டை சிறகன்
Tamil Catseye

தமிழ் தோரணசிறகன்
Tamil Lacewing

தமிழ் புல்துள்ளி
Tamil Grass Dart

தமிழ் சிறுதுள்ளி
Tamil Dartlet

அழகிகள் / Swallowtails

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பட்டாம்பூச்சிகள் அளவில் பெரியவை. தமிழ்நாட்டில் இவற்றில் 19 வகையான இனங்கள் உள்ளன. இவற்றை மலைப்பகுதிகளிலும் ஊர்ப்புறங்களிலும் காணலாம். இவை மெதுவாகவும் விரைவாகவும் பறக்கும் தன்மை உடையவை. பூக்களின் தேன் இவற்றின் முக்கிய உணவாகும். ஈரமான பகுதிகளில் அமர்ந்து உப்பு கலந்த நீரை உறிஞ்சுவதைக் காணலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள பொன்னழகி பட்டாம்பூச்சியின் இறக்கைகள் விரிநிலையில் 190 மிமீ வரை இருக்கும். இந்தியாவில் காணப்படும் மிகப்பெரிய பட்டாம்பூச்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

பொன்னழகி
Southern Birdwing

நெட்டிலி அழகி
Southern Bluebottle

நாட்டு நீல அழகி
Common Jay

மரகத அழகி
Tailed Jay

ஐம்பட்டை கத்திவால் அழகி
Five-bar Swordtail

கத்திவால் அழகி
Spot Swordtail

ரோஜா அழகி
Common Rose

மலையாள ரோஜா அழகி
Malabar Rose

சிவப்பு உடல் அழகி
Crimson Rose

கருப்பு வெள்ளை அழகி
Common Mime

கறிவேப்பிலை அழகி
Common Mormon

பழுப்பு அழகி
Malabar Raven

கருப்பு அழகி
Red Helen

நீல அழகி
Blue Mormon

புள்ளி வால் அழகி
Malabar Banded Swallowtail

எலுமிச்சை அழகி
Lime Butterfly

பெரிய மயில் அழகி
Paris Peacock



மயில் அழகி
Common Banded Peacock

மலையாள மயில் அழகி
Malabar Banded Peacock

புல்வெளியாள்கள், நுனிச்சிறகன்கள், வெள்ளையன்கள் / Whites & Yellows

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பட்டாம்பூச்சிகள் நடுத்தர அளவு உடையவை. தமிழ் நாட்டில் இவற்றில் 32 வகையான இனங்கள் உள்ளன. இவற்றைப் பெரும்பாலும் ஊர்ப்புறங்களிலும் மற்றும் மலைப்பகுதிகளிலும் காணலாம். இவை பொதுவாக வெள்ளை மற்றும் மஞ்சள் நிறங்கள் கொண்டு காணப்படும். கொன்னை வெள்ளையன் பட்டாம்பூச்சி அதிக எண்ணிக்கையில் இடப்பெயர்ச்சி மேற்கொள்ளும். தமிழ்நாட்டின் சமவெளிப் பகுதிகள் இந்தப் பட்டாம்பூச்சிகளுக்குச் சிறந்த வாழ்விடமாய் அமைந்துள்ளதால், இவற்றை அதிக அளவில் எங்கும் காண முடிகிறது.

கருப்பு நாடோடி
Dark Wanderer



முப்புள்ளி மஞ்சள் புல்வெளியாள்
Three-spot Grass Yellow

மஞ்சள் புல்வெளியாள்
Common Grass Yellow

நீலகிரி மஞ்சள் புல்வெளியாள்
Nilgiri Grass Yellow

கொன்னை வெள்ளையன்
Common Emigrant

அவரை வெள்ளையன்
Mottled Emigrant

நீலகிரி மலைச்சிறகன்
Nilgiri Clouded Yellow

வெளிர் சிவப்பு வெள்ளையன்
Small Salmon Arab

கருஞ்சிவப்பு நுனிச்சிறகன்
Crimson-tip

மஞ்சள் சிறகன்
Yellow Orange-tip

செஞ்சிறகன்
Great Orange-tip

நாடோடி
Common Wanderer

பருபலா வெள்ளையன்
Common Albatross

மலை வெள்ளையன்
Indian Cabbage White

ஓடை வெள்ளையன்
Plain Puffin

ஆதொண்டை வெள்ளையன்
Common Gull

மஞ்சள் அழகி
Common Jezebel



சுற்றும் வெள்ளையன்
Psyche

கொக்கிக்குறி வெள்ளையன்
Pioneer

வரியன்கள், சிறகன்கள், வசீகரன்கள் / **Brush-footed Butterflies**

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பட்டாம்பூச்சிகள் பெரும்பாலும் நடுத்தர அளவு உடையவை. தமிழ்நாட்டில் இவற்றில் 96 வகையான இனங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மலைக்காடுகளில் காணப்படுகின்றன. இவற்றை ஊர்ப்புறங்களிலும் காணலாம். இவை பலவகை நிறங்கள் கொண்டு காணப்படும். இக்குடும்பத்தின் டெனாய்னே (Danainae) என்னும் துணைக்குடும்பத்தைச் சேர்ந்த பட்டாம்பூச்சி இனங்கள் குறிப்பிட்ட பருவ காலங்களில் இடப்பெயர்ச்சி மேற்கொள்கின்றன. கீழே படத்தில் உள்ள பட்டாம்பூச்சியை ஈரக்காடுகளில் மட்டுமே காண முடியும்.

பச்சை காட்டுச்சிறகன்
Clipper

கருநீல வரியன்
Dark Blue Tiger

வெந்தய வரியன்
Plain Tiger

வென்புள்ளி கருப்பன்
Common Crow

அந்திச்சிறகன்
Common Evening Brown



பெருங்கண் புதர்சிறகன்
Glad-eye Bushbrown

வெள்ளை வளையன்
White Four-ring



பழனி சிறகன்
Palni Fritillary

சிறுத்தை சிறகன்
Common Leopard

செம்பொன் காட்டுச்சிறகன்
Cruiser

காட்டுக்களா சிறகன்
Rustic



வெண்கருப்பு சிறகன்
Common Sailer

தீச்சுடர் சிறகன்
Baronet

வெண்பஞ்சு சிறகன்
Common Map

காஞ்சொறி சிறகன்
Joker



ஆமணக்கு சிறகன்
Common Castor

மயில் வசீகரன்
Peacock Pansy

பழுப்பு வசீகரன்
Lemon Pansy

பசலை சிறகன்
Danaid Eggfly

நீலன்கள் / Blues

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பட்டாம்பூச்சிகள் பெரும்பாலும் சிறிய மற்றும் நடுத்தர அளவு உடையவை. தமிழ்நாட்டில் இவற்றில் 94 வகையான இனங்கள் உள்ளன. இவற்றை ஊர்ப்புறங்களில் காணமுடிந்தாலும். பெரும்பாலனவை காடுகளில் காணப்படுகின்றன. இக்குடும்பத்தின் பெரும்பாலான இனங்களின் மேற்புறம் நீல நிறத்தில் இருக்கும். பூக்களில் உள்ள தேன் முக்கிய உணவாகும். ஈரம் நிறைந்த மண் பகுதிகளில் அமர்ந்திருப்பதைக் காணலாம். கீழே படத்தில் உள்ள குறு நீலன் பட்டாம்பூச்சி இந்தியாவின் மிகச்சிறிய பட்டாம்பூச்சியாகக் கருதப்படுகிறது.

குறு நீலன்
Oriental Grass Jewel



செங்கதிர் நீலன்
Indian Sunbeam

சாம்பல் வெள்ளிவரியன்
Plumbeous Silverline

வாலில்லா வெண்வரி நீலன்
Tailless Lineblue

புங்க நீலன்
Common Cerulean

வரி நீலன்
Zebra Blue

கரும்புள்ளி நீலன்
Common Pierrot

கரும் புல்நீலன்
Dark Grass Blue

சின்ன புல்நீலன்
Tiny Grass Blue

சிவப்பு நீலன்
Red Pierrot



பொட்டு நீலன்
Quaker



வேலி நீலன்
Common Hedge Blue



புதிர் நீலன்
Monkey Puzzle

எலுமிச்சை நீலன்
Lime Blue

பெரிய அடர்நீலன்
Large Oakblue



கருவேல நீலன்
Common Acacia Blue



நீலகிரி நீலன்
Nilgiri Tit

சேனை நெடுவாலி
Yamfly

சாம்பல் மின்னி
Slate Flash

தாவிகள், துள்ளிகள் / Skippers

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பட்டாம்பூச்சிகள் பொதுவாகச் சிறிய அளவு உடையவை. தமிழ்நாட்டில் இவற்றில் 83 வகையான இனங்கள் உள்ளன. இவற்றை ஊர்ப்புறங்களில் காணமுடிந்தாலும் பெரும்பாலனவை மலைக்காடுகளில் காணப்படுகின்றன. இக்குடும்பத்தைச் சேர்ந்த பட்டாம்பூச்சிகள் வேகமாக வில்லில் இருந்து செல்லும் அம்பு போல பறக்க கூடியவை. காலை, மாலை நேரங்களில் இவற்றைக் காணலாம். இவற்றில் சில இரவு நேரங்களில் உணவு தேடும் தன்மை உடையவை. இங்குத் தரப்பட்டுள்ள பட்டாம்பூச்சி இனங்கள் தமிழகத்தில் பரவலாக எங்கும் காணப்படுபவை.



துத்தி தாவி
African Marbled Skipper

நாமத் தாவி
Common Banded Awl

பொன் பரப்பி
Golden Angle

செம்மஞ்சள் பரப்பி
Fulvous Pied Flat

நரைச்சிறகு தாவி
Indian Skipper

கருஞ்சிவப்பு தாவி
Chestnut Bob

மஞ்சள் தாவி
Grass Demon

நெல் துள்ளி
Rice Swift

வயல் துள்ளி
Small Branded Swift

மூங்கில் துள்ளி
Dark Palm Dart

புழுக்களின் உணவுத்தாவரங்கள்

ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த பெண் பட்டாம்பூச்சிகள் அவற்றிற்கே உரித்தான சில குறிப்பிட்ட தாவரங்களில் மட்டுமே முட்டையிடும். இவை புழுக்களின் உணவுத் தாவரங்கள் என்று அறியப்படும். பட்டாம்பூச்சிகள் ஓரிடத்தில் நிலைத்து வாழ இந்த உணவுத் தாவரங்கள் அவசியமாகின்றன. முட்டையில் இருந்து வெளிவரும் புழுக்கள் இத்தாவரத்தின் இலைகள், மொட்டுகள், பூக்கள், பழங்கள் உண்டு முழு வளர்ச்சி அடைந்த பின், அதே தாவரத்திலோ அல்லது அருகிலோ தமது கூட்டுப்புழு நிலையை அமைத்துக் கொள்கின்றன.

பூத்தாவரங்கள்

முழு வளர்ச்சியடைந்த பட்டாம்பூச்சிகளுக்குப் பூக்களின் தேன் ஒரு முக்கிய உணவாகும். இத்தாவரங்கள் பூத்தாவரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பட்டாம்பூச்சிகள் பல வகையான பூத்தாவரங்களில் இருந்து தம் தலையில் உள்ள உறிஞ்சு குழல் மூலம் தேனை எடுத்துக்கொள்கின்றன. தேன் உண்டு முடிந்ததும் இந்த உறிஞ்சு குழலைச் சுருட்டிக்கொள்ளும். பட்டாம்பூச்சிகள் அழுகிய பழங்கள், பறவை மற்றும் விலங்குகளின் எச்சம், மரத்தில் வடியும் பால் போன்றவற்றிலிருந்தும் தமக்குத் தேவையான திரவ உணவை எடுத்துக்கொள்கின்றன.

பட்டாம்பூச்சி தோட்டம்

நம் வீட்டுத் தோட்டத்தில் ஒரு சிறு பகுதி போதும் பட்டாம்பூச்சிகளைக் கவர்ந்து அழைக்க. புழுக்களின் உணவுத் தாவரங்கள் மற்றும் பூத்தாவரங்களை நடுவதன் மூலம் இவற்றை எளிதில் நம்மை நோக்கி வரவழைக்கலாம். இத்தாவரங்கள் அனைத்தும் நாட்டுத்தாவரங்களே ஆகும். பசுமை வளம் குறைந்த நகரப்பகுதிகளில் இவ்வாறு செய்வது மிகுந்த பயனளிக்கக் கூடியதாகும். இத்தாவரங்களில் பட்டாம்பூச்சிகள் தேன் குடிக்க வருவதும் முட்டை இட வருவதும் பார்ப்பதற்கு ஒரு சிறந்த அனுபவமாய் அமையும்.

பட்டாம்பூச்சி நோக்கல்

பட்டாம்பூச்சி நோக்குதல் நமக்கு ஒரு மகிழ்வான அனுபவத்தை அளிக்கக்கூடியது. பட்டாம்பூச்சிகள் சூரிய ஒளிமிக்கப் பொழுதுகளில் எங்கும் சிறகடித்துப் பறப்பதைக் காணலாம். இவற்றை நம் வீட்டுத்தோட்டம், ஊர் மற்றும் நகர்ப் பகுதிகள், நீர் நிலைகளின் அருகில் கண்டு மகிழலாம். அரிய பட்டாம்பூச்சி இனங்களைக் காண வளம் மிகுந்த மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கு இயற்கை நடை மேற்கொள்ளலாம். வார விடுமுறை நாட்களில் பட்டாம்பூச்சி நோக்குதலை வழக்கப்படுத்திக் கொள்ளலாம்.

தமிழகப் பட்டாம்பூச்சிகள்

வெளியீடு: இயற்கை மற்றும் பட்டாம்பூச்சி அமைப்பு

ஜூன்-2021

இயற்கை மற்றும் பட்டாம்பூச்சி அமைப்பு (TNBS) தமிழகத்தில் பட்டாம்பூச்சிகளின் நிலைகளைப்பற்றி ஆய்வு மேற்கொண்டு வருகிறது. மேலும் அவற்றைப் பற்றிய தரவுத்தள மேலாண்மையையும் கட்டமைத்துள்ளது. சுற்றுச்சூழலில் பட்டாம்பூச்சிகளின் முக்கியத்துவத்தைப் பொதுமக்கள் மற்றும் சூழல் பாதுகாவலர்களிடம் கொண்டு செல்லும் முக்கிய பணியையும் ஆற்றி வருகிறது.

வடிவம் & எழுத்து: அ. பாவேந்தன்

படங்கள்: பாலகிருஷ்ணன் R, கோபாலகிருஷ்ணன் S, நிஷாந்த் CV, ரமணசரன் H, தெய்வபிரகாசம் H, விஸ்வநாதன் S, ஸ்ராவன்குமார் K, சுபாஷ் புலிக்கல், கீதாஞ்சலி ரகுநாதன், தர்ஷன் திரிவேதி, அ. பாவேந்தன்

பின் அட்டை ஓவியம்: சாகித்யா செல்வராஜ்

பிழை திருத்தம்: தமிழாசிரியர் த. இராமலிங்கம்

AC TECH
1984-88

இந்த சிறுநூல் பள்ளி மாணவர்களுக்கு சென்றடையும் வகையில் முழு பொருளுதவி அளித்த ACTech, Anna University 1984-88 Batch நண்பர்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகள்!

Tamilnadu Butterflies
tamilnadubutterflies

tamilnadubutterflies

tamilnadubutterflies@gmail.com